RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-222916

# எஸ்.ராமகிருஷ்ணன் துயில் புதினத்தில் உளவியல் கூறுகள்

**செ. சக்திமுருகன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு-638052, தமிழ்நாடு, இந்தியா.

# S. Ramakrishnan Psychological Elements in S.Ramskrishnan's Thuyil Novel

**C. Sakthimurugan** [a, *]

[a] Department of Tamil, Nandha Arts and Science College, Erode -638052, Tamil Nadu, India

* Corresponding Author: sakthimurugantamil@gmail.com

Received: 26-09-2022
Revised: 06-11-2022
Accepted: 11-11-2022
Published: 05-12-2022

Check for updates

## ABSTRACT

Psychology is the study of human behavior. Determining human behavior and understanding what is hidden in his soul is called psychology. Literature reflects human life. It reveals the workings of the human mind. Every creator's work is an expression of his experiences. In this case, literature and psychology are related to each other. Thus, the purpose of this article is to study the psychological elements present in S. Ramakrishnan's novel Thuyil.

**Keywords:** Psychology, Thuyil, Ramakrishnan, Human behavior

## முன்னுரை

உளவியல் என்பது மனிதனின் நடத்தை பற்றிய அறிவியல் துறையாகும். மனிதனின் நடத்தையை நிர்ணயிப்பதும் அவன் உள்ளத்தில் புதைந்து கிடப்பனவற்றைப் புரிந்துகொள்வதுமே உளவியல் எனப்படும். இலக்கியம் மனிதனின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது. அது மனிதமனத்தின் செயல்பாடுகளை வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு படைப்பாளனின் படைப்புகளும் அவனது அனுபவங்களின் வெளிப்பாடாகும். இந்நிலையில் இலக்கியமும் உளவியலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் விளங்குகின்றன. அந்தவகையில் எஸ்.ராமகிருஷ்ணனின் துயில் புதினத்தில் இடம்பெறும் உளவியல் கூறுகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## உளவியல் அல்லது மனவியல்

உளவியல் 'Psychology' என்னும் சொல் கிரேக்கமொழிச் சொற்களான'ஸைக்கி'(Psyche)என்ற உயிரைக் குறிக்கும் சொல்லையும், 'லோகஸ்' (Logus) என்னும் அறிவியலைக் (Science) குறிக்கும் சொல்லையும் மூலமாகக் கொண்டுஉருவாக்கப்பட்டது. எனவே ஆரம்பகாலத்தில் உளவியல் என்பது 'ஆன்மா' 'மனம்' போன்றவற்றை ஆராயும் இயலாகக் கருதப்பட்டது. வெகுகாலத்திற்கு முன்பே இக்கருத்து கைவிடப்பட்டு, நடத்தையைப் பற்றி முறையாக ஆராயும் துறையே உளவியல் என்றாயிற்று.

'மனிதனின் புறச்செயல்களை உற்றுநோக்கி முறையாக ஆராய்ந்து அதன் மூலம் அவை, எங்ஙனம் அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும், சுற்றுச்சூழலில்

ஏற்படும் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்றும் விளக்குவதே உளவியலாகும்" என்பர் (Nagarajan & Seetharaman, 2009)

## உளவியல் கூறுகள்

இன்றைய புதினங்களில் உளவியல் கூறுகளாக ஆசைகளை அடக்குவதால் ஏற்படும் மனப்போராட்டங்கள், கனவு, பாலியல்விருப்பு என வெளிப்பட்டிருந்த கூறுகள் இன்றைய சமூகத்தில் மனித விழுமியங்களை சிதைக்கக் கூடியதாக அமைந்துள்ளன. துயில் புதினத்தில் இடம்பெறும் நெறிபிறழ்வு, உள்ளப்போராட்டம், மனஅழுத்தம், மனச்சிதைவு, முறையற்ற பாலுணர்ச்சி போன்ற கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

## நெறி பிறழ்வு

இன்று நட்பு, காதல், உறவுகள் போன்ற அனைத்திலும் உண்மை இல்லாமல் நெறி பிறழ்ந்துள்ளதை காண முடிகிறது. இயல்பான பாலியல் செயல்பாடுகளுக்கு மாறுதலானது. உளவியல் நோக்கில் பாலியல் தொடர்பான வேட்கைகளைக் குறிப்பது. இதன் அடிப்படையிலேயே மோகத்திரிபுகள் (Pervertions)ஏற்படுகின்றன என்பர். இவ்வாறான மோகம் காட்சி மோகம் (Exibitionism) பார்வை மோகம் (Voyerism) சார்பொருள் மோகம் (Fetishism) தன் மோகம் (Narcissism) என, பல நிலைகளில் அழைக்கப்பட்டு வருகின்றன.

## பார்வை மோகம்

பிறரை காம நோக்கில் பார்த்து இன்புறுவது பார்வை மோகம் (Voyerism). உடலளவில் கூடி இன்புறாமல் ஒருதலையாக மனதளவில் மட்டும் காமப் பார்வை கொண்டு இன்புறுவது பார்வை மோகம். துயில் புதினத்தில் சௌடையா என்னும் கதாபாத்திரம் உணவு விடுதிக்கு வந்துபோகும் ஒவ்வொரு பெண்ணையும் உன்னிப்பாகக் கவனித்து மனத்தில் ஆபாசமாக சித்தரித்து மனதிலேயே அவர்களுடன் கூடுவது போல கற்பனை செய்து பாலியல் சார்ந்து பேசுவதையும், நிர்வாணமாக ஆண் பெண் வடிவிலான பாக்கு வெட்டியில் பாக்கை வைத்து வெட்டி, உடல் இரண்டும் ஒன்று சேர்வதுபோல வேடிக்கை பார்ப்பதன் மூலம் அறியலாம்.

'ஹோட்டலுக்கு வந்துபோகும் ஒவ்வொரு பெண்ணையும் உன்னிப்பாகக் கவனிப்பவர். அதனால் அந்த பெண்களைப்பற்றி அழகருடன் பச்சை பச்சையாகப் பேசிக்கொண்டிருப்பார்." (து.ப83) 'குளிக்கப் போகும் இடத்தில் சிரட்டை கிடைத்தால் அதில் ஈரமண்ணை அள்ளி கையால் இறுக்கமாகத் தட்டிப் பிறகு அதைக் கவிழ்த்துவிடுவார். அந்த மண் பெண்களின் முலை போன்ற வடிவில் இருக்கும். அதில் ஆசை தீரத் தடவியபடியே அவனையும் தொட்டுப் பார்க்கச் சொல்வார்" (து.ப.83) என்ற வரிகள் அவருடைய காம நோக்கமான பார்வையை வெளிக்காட்டுகின்றன.

## உள்ளப் போராட்டம்

ஒருவரால் சரியான முடிவை எடுக்க முடியாத நிலையே உள்ளப்போராட்டம் எனப்படுகிறது. இதனை து.சிவராஜ் 'ஒரே நேரத்தில் ஒன்றிற்கும் மேற்பட்ட விருப்பங்கள் உடனிகழ்வாய்த் தோன்றுமாயின் எதனை ஏற்பது, எதனை விடுப்பது என்னும் ஐயம் தோன்றும். இதன் அடிப்படையில் முடிவெடுக்க இயலா நிலையும் செயல்பட இயலா நிலையும் தோன்றும். இத்தகைய நிலையே உள்ளப்போராட்டம் எனப்படும்' (Sivaraj, 1994)

துயில் புதினத்தில் கடல்கன்னி போல் வேடமிடும் சின்னராணிக்கு கடற்கன்னி போல் வேடமிடத் துவங்கிய நாட்களிலிருந்து தன்னைப் பலரும் வந்து பார்ப்பது கூச்சமாகவும் வேதனையாகவும் இருந்தது. எத்தனை நாளைக்கு அவமானத்தைச் சகித்துக்கொண்டு வாழ்வது என்று மனதில் எண்ணினாள். அதனால் எப்படியாவது இந்த கடற்கன்னி உடையை கழட்டி எறிந்துவிட்டு

அழகரையும் விட்டு ஓடி வேறுவேலைக்குச் செல்லலாம் என்றும் நினைத்தாள். ஆனால் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை நினைத்தும், தன் கணவர் அழகரை நினைத்தும் கடல்கன்னி போல் வேடமிடுவதை விடமுடியாமல் மனப் போராட்டத்திற்கு உள்ளாகிறாள்.

'அன்றைய இரவில் அவளுக்கு உறக்கம் பிடிக்கவேயில்லை. இப்படியே எத்தனை நாளைக்கு அவமானத்தைச் சகித்துக்கொண்டு வாழ்வது. பேசாமல் அழகரை விட்டு ஓடிப்போய்விடலாம் போலிருந்தது. தொட்டிலில் உறங்கிக்கொண்டிருக்கும் பிள்ளையின் நினைப்பு அவளை வதைத்தது. செய்வதறியாமல் அன்றிரவெல்லாம் நினைத்துநினைத்து விசும்பிக் கொண்டிருந்தாள்" என்ற கூற்று அவளது மனப்போராட்டத்தையும் எதிலும் முழுமையாக ஈடுபட முடியாமையையும் வெளிக்காட்டுகிறது (Ramakrishnan, 2017).

## மன அழுத்தம்

மனிதன் உண்மையாகவோ அல்லது கற்பனையாகவோ உடல் ரீதியாக அல்லது மன ரீதியாக ஏற்படும் தாக்கங்களுக்கு சரியான முறையில் எதிர் செயலை செய்ய முடியாத நிலை தோன்றுவதன் தொடர்விளைவு அல்லது பின்விளைவே மன அழுத்தம் எனலாம். மன அழுத்தத்தின் அறிகுறிகள் உடல், மன, பழக்கவழக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்தும். மன அழுத்தம் அதிகரிக்கும் போது எளிதில் எரிச்சல் அடைதல், எதிலும் கவனம் செலுத்த முடியாத நிலைமை போன்ற பிரச்சனைகள் ஏற்படும். மனஅழுத்தம் உடல்ரீதியான விளைவுகள், மனரீதியான விளைவுகள் என இரண்டு நிலைகளில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

### உடல் ரீதியான விளைவு

மன அழுத்தம் ஏற்படும் போது உடல்ரீதியாக படபடப்பு, நடுக்கம், குளிர், வேர்வைவழிதல் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும். அவ்வகையில் துயில் புதினத்தில் இடம்பெறும் சிவபாலன் மன அழுத்தத்தின் விளைவாக உடல்ரீதியான பாதிப்புக்கு உள்ளாகிறார். சிவபாலன் அரசு மற்றும் தனியார் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை உயர் அதிகாரியாக அரசுப்பணியில் இருந்தார். இவர் அரசு தணிக்கை அதிகாரியாக சேர்ந்தபின் வியர்வையைப் பற்றி அறிந்திருக்கவேயில்லை. சிவபாலனின் மாத இலக்கு மூன்று லட்சம். அவர் நிர்ணயித்த மாதத் தொகையைப் பெறுவதற்கான அதிகாரத்தையும் தகுதியையும் பெற்றிருந்தார். ஒருமுறை சிவபாலன் சென்னராயப்பட்டியில் உள்ள கூட்டுறவு சங்கத் தணிக்கைக்கு சென்றபோது நல்லவிதமாக முடித்துக் கொடுத்ததற்கு ஒன்றரை லட்சம் பணமும் ஒரு வண்ணத்தொலைக்காட்சியும் கொடுத்தனர். அதேபோல் அவர் தம்மம்பட்டி கூட்டுறவு சங்கத்தின் தணிக்கைக்கு சென்ற போது அதன் பொறுப்பாளர் ராமரத்தினம் கணக்கு முடிக்க இன்னும் இரண்டு நாள் அவகாசம் கேட்டார். இதற்கு சிவபாலன் முதலில் மறுத்தார். பின் ஒத்துக்கொண்டார். கூட்டுறவு சங்கத்தின் பொருளாளர் சேது அதிகாரி சிவபாலனை நல்ல முறையில் கவனித்துக் கொண்டார். அடுத்தநாள் ராமரத்தினம் கூட்டுறவு சங்கத்தின் தணிக்கை கணக்கை கொண்டு வந்தார். அதில் ஏகப்பட்ட குளறுபடிகள். சிவபாலன் இதை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி பணம் பறிக்க முடிவு செய்தார். முதலில் ஒரு லட்சம் பெற்றார். பின்னர் அவர்களது கணக்கை முடிக்க பத்து லட்சம் தேவைப்படும் என்றார். ராமரத்தினம் இரண்டு லட்சம் பணம் கொடுத்துவிட்டு மீதியை வெள்ளிக்கிழமை தருவதாக ஒப்புக்கொண்டார். அதற்கு அடுத்தநாள் அலுவலகம் செல்ல அவர் குளித்தபோது முதன்முதலாக கையில் வியர்க்கத் துவங்கியது. இதுவரை வியர்வையைப் பார்த்திராத சிவபாலன்இ தற்போது அளவுக்கு அதிகமாக பணம் பெறுவதாக மன அழுத்தத்திற்கு உள்ளானதால் அவர் கையில் சில நாட்களாக வேர்வை வழிந்து கொண்டே இருக்கிறது. அவர் எவ்வளவோ வைத்தியம் செய்தும் கையில் வழியும் வேர்வை சரியாக வில்லை என்பதை 'தனது கோபத்தை வீட்டில் இருந்தவர்களிடம் காட்டத் துவங்கினார். வியர்வை வழிந்து கைகளை நனைத்தபடி இருந்தது. மனசாட்சிக்கு விரோதமாக தான் கையூட்டுப் பெற்றதுதான் வியர்வைக்குக் காரணம் என்று அவருக்கு ஒத்துக்கொள்ள முடியவேயில்லை. இது ஏதோவொரு வியாதி. அது தன்னைப் பற்றிக்கொண்டுவிட்டது. எவ்வளவு பணம் செலவானாலும் அதைத் தீர்த்துவிடவேண்டியதுதான் என்று முனைப்போடு அலைந்தார். ஒரே

நாளில் மூன்று மருத்துவர்களைக் காண்பது. களிம்புகள், சூரணங்கள், ஆங்கில மருந்துகள் என்று எதையெதையோ சாப்பிட்டு வந்தார். எதிலும் வியர்வை சுரப்பது குறையவேயில்லை." சிவபாலனின் இத்தகைய நிலையானது உளவியலாளர்கள் குறிப்பிடும் உடல்ரீதியான பாதிப்போடு ஒப்புமை உடையது எனலாம் (Ramakrishnan, 2017).

இப்புதினத்தில் இடம்பெறும் சரவணமுத்து என்னும் மற்றொரு கதை மாந்தருக்கும் இத்தகைய உளப்போராட்டம் ஏற்படுகிறது. எண்ணெய் வியாபாரம் செய்யும் சரவணமுத்துவுக்கு உடம்பெல்லாம் அம்மை வந்தது போலப் புண்ணாகிச் சீழ்பிடித்துள்ளது. அந்தப் புண்ணைப்பற்றி சரவணமுத்துவிடம் கொண்டலு அக்கா விசாரித்த போது, அவர் இந்தப்புண் கடந்த ஐந்து வருடங்களாக உள்ளது என்றும், எவ்வளவோ வைத்தியம் செய்தும் உலர்வதேயில்லை என்றும் கூறுகிறார். அதற்கு கொண்டலு அக்கா 'எனக்கென்னவோ இந்தப் புண்கள் ஆறாமல் இருப்பதற்கு நீ யாரையோ வெறுப்பதுதான் காரணம் என்று தோன்றுகிறது. உன்கூடவே இருக்கும் யாரோ ஒருவரை நீ அளவுக்கு மீறி வெறுக்கிறாய். ஆனால் அதைக் காட்டிக்கொள்ளவே முடியவில்லை. அதுதானே உண்மை“ என்கிறாள் (Ramakrishnan, 2017).

அதற்கு சரவணமுத்து கோவில் வாசலில் பூ வியாபாரம் செய்யும் அமுதினி என்ற பெண்ணை திருமணம் செய்தேன். அமுதினி திருமணமான புதிதில் யாரோடும் பழகாதவளாக இருந்தாள். நாட்கள் செல்லச் செல்ல ஒவ்வொருவரிடமும் சண்டையிட்டு, கடுமையாகத் திட்டினாள். வீட்டில் உள்ள அனைவரையும் வெறுத்தாள். என்னையும் துன்புறுத்தினாள். சரவண முத்துவின் சகோதரனை வீட்டை விட்டு வெளியேற்றினாள். சரவணமுத்து அமுதினியை நீ கோவில் வாசலில் பூ விற்றவள் தானே என்று கூறியதற்காக அவளது அம்மா காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கச் செய்தாள். இல்லையென்றால் நான் தற்கொலை செய்து கொள்வேன் என்று சண்டையிட்டாள். அவனும் அவளது அம்மா காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். மன்னிப்புக் கேட்ட பின்பும் அவளது அம்மா அவளை தனியாகக் கூட்டிச் செல்வதாகக் கூறினார். ஏன் இப்படியெல்லாம் செய்கிறாய் என்று கேட்டால் ஓயாத தலைவலி என்று படுத்துக் கொள்கிறாள். மனைவியால் தனது திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இல்லையே என்றும்இ சகோதரனை வெறுக்கும் நிலைக்கு உள்ளானதையும் நினைத்து சரவணமுத்து மன அழுத்தத்திற்கு உள்ளானார்.

'அவர் தயக்கத்துடன் சொன்னார். என் மனைவியை அவள் போல் ஒரு பெண்ணை இந்த உலகில் காணவே முடியாது. அவள் நோயை ஒரு தந்திரமாகப் பயன்படுத்தி நடிக்கின்றவள் அக்கா. சொன்னால் நம்ப மாட்டீர்கள். அவளுக்கு நினைத்த நேரத்தில் நோய் பிடித்துக்கொள்ளும். எந்த மருத்துவத்திலும் குணமாகாது. உண்மையில் அவளுக்கு எந்த நோயும் இல்லை. அவள் நடிக்கிறாள். நோய்மை வேஷம் போட்டுக்கொண்டு தன் மீது மற்றவர்கள் பச்சாதாபம் காட்டவேண்டும் என்பதற்காக நடிக்கிறாள். இதுநாள் வரை நான் அவளது நோய்மை வேடத்தை நம்புவது போல நடித்துக் கொண்டு தானிருக்கிறேன். அதற்காக எவ்வளவு மருந்துகளுக்கு பணம் செலவழித்திருக்கிறேன். இப்படி என்னை வதைத்து பார்ப்பதில் அவளுக்கு ஒரு ஆனந்தமிருக்கிறது. அதை வெகுவாக ரசிக்கிறாள். என்னால் அதை நன்றாக உணர முடிகிறது. ஆனால் அவளிடமிருந்து என்னால் விடுபட முடியாது." என்பதிலிருந்து சரவணமுத்து தொடர்ந்து மன அழுத்தத்தில் இருப்பதையும் அதிலிருந்து வெளிவர முடியாமல் தவிப்பதையும், மன அழுத்தத்தின் காரணமாகவே நீண்ட நாள் ஆறாத புண் ஏற்பட்டு இருப்பதையும் அறிய முடிகிறது (Ramakrishnan, 2017).

## மனரீதியான விளைவு

மனித மனம் தீர்க்கப்படாத பல்வேறு பிரச்சனைகளால் நிறைந்திருக்கிறது. இப்பாதிப்பு தீர்வு காண்பதில் சற்று சிரமம், முடிவெடுப்பதில் சிக்கல், தன்னம்பிக்கை இழத்தல், அடக்க முடியாத ஆசைகள், தேவையற்ற கவலைகள், படபடப்பு, அதீத பயம், பயத்தால் பாதிப்புகள், குணாதிசயத்தில் அடிக்கடி மாற்றங்கள் போன்ற மனநிலை பாதிப்புகளையும் பிறகு உடல்நிலை பாதிப்புகளையும் ஏற்படுத்தும்.

மேலும் துயில் புதினத்தில் இடம்பெறும் கரோலினா என்ற கதாபாத்திரம் மன அழுத்தத்தால் ஏற்படும் மனவியல் ரீதியான விளைவுகளில் ஒன்றான அதீத பயத்திற்கு உள்ளாகிறார்.

கரோலினாவுக்கு சிறுவயதிலிருந்தே அடிக்கடி காய்ச்சல் வந்து போகும். பள்ளியில் படிக்கும்போது முந்தைய நாள் இரவுவரை சாதாரணமாக இருப்பாள். அடுத்த நாள் விடியும்போது உடலெல்லாம் காய்ச்சல் கொதிக்கும். பத்தாம் வகுப்பு படிக்கும் போது தனக்கு காய்ச்சல் வந்து விடக்கூடாது என்று கடவுளை வணங்கினாள். அவள் பயந்தது போலவே கணிதப் பரீட்சை அன்று காய்ச்சல் கண்டது. அவள் கல்லூரிப் படிப்பை முடித்து வேலைக்கு சென்ற போதும் திருமணமான பின்னும் காய்ச்சல் வருவது நிற்கவில்லை. அவளுக்கு வின்சி என்ற குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கும் தனக்கு காய்ச்சல் வந்தது போலவே வந்துவிடுமோ என்று பயந்தாள். குழந்தை வின்சியை சிறுவர் பள்ளியில் சேர்த்தாள்.

பள்ளியில் சேர்த்த மறுநாள் குழந்தை வின்சிக்கு காய்ச்சல் வந்துள்ளது என்ற செய்தியைக் கேட்டதும் கரோலினா தன்னைப் போலவே தன் குழந்தைக்கும் காய்ச்சல் பிடித்து விட்டதோ என்று பயந்தாள்.

‘தன்னைப்போலவே மகளும் பள்ளி வாழ்க்கை முழுவதும் காய்ச்சலில் கிடந்து அவதிப் படக்கூடாது என்ற ஆதங்கம் அவளை மீறி உண்டானது. அதே நினைவாகவே இருந்தாள். அதுவே அவளது நோயாக மாறியது. அடிக்கடி அவள் வின்சிக்கு காய்ச்சல் அடிக்கிறதா என்று தொட்டுப் பார்ப்பாள். குளிர்ந்த பொருள் எதையும் சாப்பிட விடமாட்டாள். அறை ஜன்னல்களை மூடியே வைத்திருப்பாள். ஆனாலும் அவளை மீறி வின்சி அடிக்கடி காய்ச்சலில் விழுகிறாள்." என்று கூறுவதிலிருந்து கரோலினா தனக்கு காய்ச்சல் வந்தது போலவே தனது மகளுக்கும் வந்து விடுமோ என்று மனவியல் ரீதியான பாதிப்பான அதீத பயதிற்கு உள்ளாவதை அறியமுடிகிறது (Ramakrishnan, 2017).

## முடிவுரை

இக்கட்டுரையில் இருந்து கீழ்காணும் முடிவுகள் கிடைக்கப்பெறுகின்றன. துயில் புதினத்தில் இடம்பெறும் ஒவ்வொரு கதாபாத்திரமும் நெறிபிறழ்வு, உள்ளப்போராட்டம, மனஅழுத்தம், மனச்சிதைவு போன்ற உளவியல் சிக்கல்களுக்கு உள்ளாவதை துயில் புதின கதாபாத்திரங்கள் வழிஅறியமுடிகிறது.

## References

Nagarajan, K., Seetharaman, D. (2009) Ulaviyal Nookil Katralum Manitha menpadum, Ram Pathippagam, Chennai, India.

Ramakrishnan, S. (2017) Thuyil, Deshanthri Publications, Chennai, India.

Sivaraj, T. (1994) Sanga Ilakiyathil Ulaviyal, Sivam Pathippagam, Vellur, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License